முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**முக்காலமும் உணர்ந்த முனிவனும் பொருளாதார மேதையுமான முருகப்பெருமான் அருளியது எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விகாரி சித்திரை மாதம் 1ம் திகதி முதல் விகாரி சித்திரை மாதம் 8ம் திகதி வரை ஏப்ரல் 14ம் திகதி முதல் ஏப்ரல் 21ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **மக்களாட்சி கொண்ட பாரதமே**
**மகான்கள் வழிகாட்டல் நிறைந்த தமிழகமே**
**தேக்கமிலா வளர்ச்சி உருவாக்க**
**தேர்தல் களம் காணும் பாரதம் தமிழகமே**

**2.** **பாரதம் தமிழகம் தன்னில்**
**பாடிடுவேன் விகாரி தகர் திங்களில்**
**கூறவே ஏகதிகதி மேல் அட்டம திகதிவரை**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 1ம் நாள் 14.04.2019, ஞாயிறு முதல் சித்திரை மாதம் 8ம் நாள் 21.04.2019, ஞாயிறு முடிய)**
**குறிப்பாக வார நிகழ்வாக எதிர்கால பலன்**

**3.** **பலன் குறித்த ஆசி தன்னை**
**பகருவேன் சுப்பிரமணியர் யானும்**
**சலனமுற தேர்தல் களம் காணும்**
**சாற்றிடுவேன் கட்சிகள் தானும்**

**4.** **தானுமே சத்திய நெறிபட**
**தங்கள் கடமை உரிமை உணர்ந்து**
**ஞானம்பட மக்களை அணுகியே**
**நன்மைபட செயல்பாடு கண்டால்தான்**

**5.** **தன்னிலே மக்களிடை செல்வாக்கு**
**தனக்குரிய வெற்றி காண நேரும்**
**மண்ணுலகை சுரண்டும் நோக்கில்**
**மண் பொன் பொருளாசை வழி**

**6.** **வழிதனில் உழன்று ஊழலில்**
**வாழ்வை கழிக்கின்ற தலைமைகள்**
**இழிவாக குறுக்கு வழி நாடுபவர்**
**ஏமாற்றுவதை நோக்கமாக கொண்ட**

**7.** **கொண்ட தலைமைகள் கட்சிகள்**
**கொள்கை என்பதே இல்லாத**
**தொண்டுள்ளமும் இல்லாதவர்களும்**
**தேர்தல் களத்தில் பின்னடைவே காண நேரும்**

8. நேருமையாளர்களை தேர்ந்தெடுக்கும்
நிலைமைகள் தமிழகம் பரதத்தில்
உருவாக்கும் சக்திகளாக மக்கள்
உண்மை நிலை அடைந்து வருவதால்

9. வருகவே வாக்குரிமை வழியில்
வல்லமையான ஆளுமை தானும்
பெருமைபட பரதம் தமிழகத்தில்
புகலுவேன் அமையக் கூடும்

10. கூடாத வண்ணம் வாக்குரிமையை
குந்தகமுற விற்பவர்கள் விலை போகுபவர்கள்
ஈடேறா வண்ணம் நிலைகுலைந்து
யுகபரத்தில் அழிவையே காண்க நேரும்

11. காண்கவே ஞானமும் தெளிவும்
கண்ணியமான பாதுகாப்பான வாழ்வுபெற
ஆன்மீக உண்மை நெறி காட்டும்
அரங்க ஞானி வழிகளை ஏற்றுவர

12. வருகவே நல்ல மாற்றமும்
வளரும் நிலைக்கான தேற்றமும்
முருகப்பெருமான் என் அருளால்
முழுமைபட பெரும் மாற்றம் காண்கும் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் சித்திரை மாதம் 1ம் நாள் 14.04.2019, ஞாயிறு முதல் விகாரி சித்திரை மாதம் 8ம் நாள் 21.04.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

மக்களை மக்களால் ஆட்சி செய்கின்ற மக்களாட்சியினை கொண்ட பாரத தேசமே, மகான்களின் வழிகாட்டல் நிறைந்திட்ட அருள்மிகுந்த தமிழகமே தடையின்றி வளர்ச்சி அடைதல் பொருட்டு தேர்தல் நடக்கின்ற பாரத தேசமே தமிழக தேசமே தமிழகத்திலும் இந்தியாவிலும் விகாரி வருடம் சித்திரைமாதம் 1ம் நாள் 14.04.2019, ஞாயிறு முதல் சித்திரை மாதம் 8ம் நாள் 21.04.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

தேர்தலிலே போட்டியிடும் அரசியல் கட்சிகள் எல்லாம் மக்களை மதித்து கவனமுடன் சத்தியத்திற்கு கட்டுப்பட்டு தங்களது கடமையையும் மக்கள் தம் மீது கொண்ட நம்பிக்கைக்கு விரோதமாக செல்லாமல் தங்களுக்கு நாட்டின் நலனில் உள்ள உரிமையையும் உணர்ந்து மக்களை தெளிவான சிந்தனையோடு அணுகி மக்களுக்கு நன்மைகள் விளைவிக்கும் செயல்களை செய்தால்தான், அக்கட்சிகளுக்கு மக்களிடையே செல்வாக்கு உண்டாகி வெற்றி காண முடியும்.

அவ்வாறில்லாமல் மக்கள் ஏதும் அறியார் என எண்ணி நாட்டை சுரண்டும் நோக்கத்தில் மண்ணாசை, பொன்னாசை, பொருளாசை கொண்டு பொருளை சேர்ப்பதே

**லட்சியமாகக் கொண்டு பொருள் பற்றினால் உழன்று ஊழலில் வாழ்க்கையை நடத்துகின்ற தலைவர்கள், தரமற்ற வகையிலே குறுக்கு வழிகளிலே சென்று வெற்றிபெற நினைப்பவர்கள், மக்களை ஏமாற்றுவதையே குறிக்கோளாக கொண்டிட்ட தலைவர்களும் அவர்களது கட்சிகளும், கொள்கை என்பதே இல்லாத கட்சிகளும், மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்கிற தொண்டுள்ளம் இல்லாத கட்சிகளும் இந்த தேர்தலில் பின்னடைவை சந்திக்க நேரும்.**

**இந்த தேர்தலிலே நேர்மையானவர்களை தேர்ந்தெடுக்கப்படுகின்ற சூழ்நிலைகளை தமிழகத்திலும் பாரத தேசத்திலும் உருவாக்கும் சக்திகளாக பொதுமக்கள் மாறியதோடு உண்மை நிலைமைகளை தெளிவாக புரிந்து கொண்டு செயல்படும் சூழ்நிலைகளும் உருவாகியுள்ளதால் வாக்குரிமை மூலமாக பொதுமக்கள் தெளிவான முடிவுக்கு வந்து தலைமைகளை தேர்ந்தெடுப்பதினால் வல்லமைமிக்க நேர்மையான ஆட்சியானது பெருமையுடன் பாரத தேசத்திலும் தமிழகத்திலும் இனி அமையக் கூடும்.**

**நேர்மையான ஆட்சி அமைவதை தடுக்கும்விதமாக மக்கள் தங்களது வாக்குரிமைகளை விற்பவர்களும் காசிற்காக வாக்குகளை விற்று விலை போவோர்களும் நாட்டின் நேர்மையை குலைப்பதால் அவர்களது எண்ணம் ஈடேறாமல் நிலைகுலைந்து வருங்காலங்களில் இந்த நாடு அழிவையே காண நேரும்.**

**ஞானமும் தெளிவும் கண்ணியம்மிக்க வாழ்வை பாதுகாப்பான வாழ்வை பெற மக்களுக்கு உண்மை ஆன்மீகமும், தூயநெறியையும் உபதேசிக்கும் ஞானகுரு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் எளிய தூயநெறிகளை ஏற்று மக்கள் வாழ்வினில் கடைப்பிடித்து வர, உலகினில் நல்ல மாற்றங்கள் உருவாகி நாடு நல்ல முன்னேற்றமான நிலையை அடைவதற்கு உண்டான சூழ்நிலைகள் உருவாகி முருகப்பெருமான் எமது அருளால் இந்நாட்டினில் முழுமையான நல்ல மாற்றங்கள் உருவாகிடும் என தமது வார ஆசி நூல் மூலம் கூறுகிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.**

**–சுபம்–**